"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,873,57,73,000/-, மூலதனக் கணக்கில் ரூ.165,27,51,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.150,30,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 8-4-2013 (திங்கட்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

62. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் ஐம்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

81. மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013-2014. (தமிழ், ஆங்கிலம்)

82. வேளாண்மைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2013-2014. (தமிழ், ஆங்கிலம்)

[2013 ஏப்ரல் 5

83. வேளாண்மைத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2013. (தமிழ், ஆங்கிலம்)

84. உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013-2014. (தமிழ்)

85. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை. (2012-2013)

86. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பதாவது அறிக்கை. (2012-2013)

87. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை. (2012-2013)

88. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்திரண்டாவது அறிக்கை. (2012-2013)

89. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. (2012-2013)

90. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்து நான்காவது அறிக்கை. (2012-2013)

91. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்தைந்தாவது அறிக்கை. (2012-2013)

92. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்தாறாவது அறிக்கை. (2012-2013)

93. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்தேழாவது அறிக்கை. (2012-2013)